


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## பிப்ரவரி - 2019

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## பிப்ரவரி - 22.02.2019


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்




- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- விருதுகள்
- நியமனங்கள்
- முக்கிய தினங்கள்





## தமிழக நிகழ்வுகள்

- அரசு பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடம் **ஆங்கில மொழி பேச்சுத் திறனை வளர்க்க, தமிழக அரசானது பிரிட்டிஷ் கவுன்சிலுடன் ஒப்பந்தம்** மேற்கொண்டுள்ளது.

- **விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கணையருக்கு அரசு வேலைவாய்ப்பில் 3 சதவீதம் இடம் ஒதுக்கீடு** செய்ய தமிழக அரசானது **அரசாணை** பிறப்பித்துள்ளது.

## இந்திய நிகழ்வுகள்

- **"தேசிய கிராமப்புற பொருளாதார மாற்றத்திற்கான திட்டம்"** (National Rural Economic Transformation Project) எனும் புதிய திட்டத்தை, தீன்தயாள் அந்தியோதயா யோஜனா எனப்படும் **தேசிய கிராமப்புற வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அமல்படுத்துவதற்கு அமைச்சரவை ஒப்புதல்** அளித்துள்ளது.
    - தீன் தயாள் அந்தியோதயா யோஜனா, கிராமப்புற மக்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி அளித்து அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்த 2011ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

- 60 வயதைக் கடந்த அனைவருக்குமான **"முக்கியமந்திரி விரிதாஜன் ஓய்வூதிய திட்டம்" - (MVPY)** மற்றும் 60 வயதிற்கும் மேற்பட்ட பத்திரிக்கையாளர்களுக்காக, **"பீகார் பட்ராகர் சம்மன் யோஜனா" (BPSY)** என்ற ஓய்வூதிய திட்டத்தையும் **பீகார்** தொடங்கியுள்ளது.
    - இவ்விரு திட்டங்களும் ஏப்ரல் 1, 2019ல் முதல் நடைமுறைக்கு வரவுள்ளது.

## உலக நிகழ்வுகள்

- **இந்தியா மற்றும் சவுதி அரேபியா** இடையே **தேசிய முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு நிதியில் முதலீடு** செய்வதற்கான **புரிந்துணர்வு ஒப்பந்தம்** கையெழுத்தாகியுள்ளது.
    - மேலும் இருநாடுகளுக்கிடையேயான முதலீட்டு உறவுகளை மேம்படுத்தும் வகையில் இந்திய அரசின் "முதலீடு செய் இந்தியா" திட்டம் மற்றும் சவுதி அரேபியாவின் "முதலீட்டு

ஆணையம் செயல்திட்டம்'' தொடங்கப்பட உள்ளது.

## அறிவியல் & தொழில்நுட்பம்

- **பிரபஞ்சத்தின் (Universe) தோற்றம்** குறித்து புரிந்து கொள்வதற்காக **ஒட்டுமொத்த வான்பரப்பையும் ஆய்வு** செய்வதற்காக மிகவும் **புகழ்பெற்ற திட்டமான ஸ்பியரெஸ் (SPHEREx)** திட்டத்தை நாசா தொடங்க உள்ளது.
    - இந்த திட்டமானது 2023ம் ஆண்டில் செயல்படுத்த உள்ளது.

## விருதுகள்

- இந்தியாவின் முதல் **'கால்பந்து ரத்னா விருது' சுனில் சேத்ரி–க்கு வழங்கப்பட்டுள்ளது.**
    - ஏற்கனவே ''பத்மஶ்ரீ'' விருதானது சமீபத்தில் வழங்கப்பட்டது. ''பத்ம ஶ்ரீ'' விருது பெறும் 6வது கால்பந்து வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

## நியமனங்கள்

- குடியரசுத் தலைவர், **சென்னை உயர்நீதிமன்றத்தின், கூடுதல் நீதிபதியாக செந்தில் குமார் ராமமூர்த்தி** – யை நியமித்துள்ளார்.
    - இவர் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு கூடுதல் நீதிபதியாகப் பணியாற்றுவார்.

## முக்கிய தினங்கள்

- **சர்வதேச தாய்மொழி தினம் - பிப்ரவரி 21 (International Mother Language Day – 2019)**
    - மொழியியல் பன்முகத்தன்மை மற்றும் பன்மொழி கல்வி ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 21ல் சர்வதேச தாய்மொழி தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.
    - 2019ம் கருத்துரு:- **"உள்நாட்டு மொழிகளின் வளர்ச்சி, அமைதி மற்றும் நல்லிணக்கத்தின் அடிப்படை"** என்பதாகும். (Indigenous Languages Matter for development, Peace

building and reconciliation)

We Shine Academy TM